செய்தி வெளியீடு எண்: 645 நாள்:27.09.2019

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் முன்னிலையில் 26.9.2019 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களை மேம்படுத்திடும் பொருட்டு, ஜெர்மன் வளர்ச்சி வங்கியின் (KfW) கடன் உதவியுடன் 2,213 புதிய BS-VI தரத்திலான பேருந்துகளும், 500 மின்சாரப் பேருந்துகளும் வாங்கும் திட்டத்தை செயல்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறைக்கும், ஜெர்மன் வளர்ச்சி வங்கிக்கும் இடையே திட்ட உடன்பாடு (Project Agreement) கையெழுத்தானது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டில் சுற்றுச்சூழலை பாதுகாக்கின்ற வகையிலும், காற்று மாசுப்படுவதை குறைக்கின்ற வகையிலும், மின்சாரத்தில் இயங்கிடும் பேருந்துகளை தமிழ்நாட்டில் இயக்கிட வேண்டும் என்கிற உயரிய நோக்கில், லண்டன் மாநகரை தலைமை இடமாகக் கொண்டு செயல்படும் C-40 என்கிற பன்னாட்டு முகமைக்கும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறைக்கும் கடந்த 28.3.2018 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது. உலகத்தரம் வாய்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் ஆலோசகர்களை கொண்டுள்ள இந்த அமைப்பின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டில் மின்சாரப் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

அதன் முன்னோட்டமாக, கடந்த 26.8.2019 அன்று தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் வரலாற்றில் முதல் முறையாக சென்னை – மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கான முதல் புதிய மின்சார பேருந்தினை, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

2019–20ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், ஜெர்மன் வளர்ச்சி வங்கியின் (KfW) கடனுதவியுடன், 5,890 கோடி ரூபாய் செலவில் 12,000 புதிய BS-VI தரத்திலான பேருந்துகளையும், 2,000 மின்சாரப் பேருந்துகளையும் வாங்கிப் பயன்படுத்தும் வகையில் புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதனை செயல்படுத்திடும் நோக்கில், முதற்கட்டமாக 1,580 கோடி ரூபாய் (203 மில்லியன் யூரோ) மதிப்பீட்டிலான BS-VI தரத்திலான 2,213 புதிய பேருந்துகள்

500 மின்சாரப் பேருந்துகள் வாங்குவதற்கான திட்ட ஒப்பந்தம் (Project Agreement) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறைக்கும், ஜெர்மன் வளர்ச்சி வங்கிக்கும் இடையே கையெழுத்தானது. இந்த திட்ட ஒப்பந்தத்தின் மூலம், மின்சார வாகனங்களுக்கான மின்ஏற்று கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், போக்குவரத்து துறையின் செயல்பாட்டினை மேம்படுத்திட மென்பொருள் மற்றும் வன்பொருள் கொள்முதல் செய்தல், பயணிகள் தகவல் அமைப்பை நிறுவுதல், உலகத்தரத்திலான ஆலோசகர்களின் உதவிகளை பெறுதல், பணமில்லா பயணசீட்டு முறை போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. எஸ். கிருஷ்ணன், இ.ஆ.ப., போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., நிதித்துறை சிறப்பு செயலாளர் திருமதி பூஜா குல்கர்னி, இ.ஆ.ப., சென்னையிலுள்ள ஜெர்மன் நாட்டு தூதரகத்தின் துணைத் தூதர் Mrs. Karin Stoll, டெல்லியிலுள்ள KfW வளர்ச்சி வங்கியின் துணை இயக்குநர் Mrs. Christiane Schmidt, Urban Development & Mobility Senior Sector Specialist ஸ்வாதி கன்னா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**